JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **81/2016** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 8** | Prosecution /Defence / Court | |
| Name | பாலமுருகன் | Village | நல்லிகவுண்டன்பாளையம், ஈங்கூர் |
| Father's Name | சுப்பிரமணியம் | Taluk | |
| | | Age | |

**A**1 **absent**. **Petition filed and allowed**. **A**2 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 11.03.2026.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தற்போது ஈங்கூர் அருகில் உள்ள அக்னி ஸ்டீலில் சூப்பர் வைசராக வேலை பார்த்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் வேலை தேடிக் கொண்டிருந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 08.06.2016 ம் தேதி இரவு 8 – 8.30 மணி இருக்கும், நானும், தீபக்கும் பெருந்துறை நோக்கி வந்து கொண்டிருந்த போது காடப்பாளையம் என்னுமிடத்தில் பெருந்துறை காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜர் சாட்சிகளாக என்னையும், தீபக்கையும் இருக்க கேட்டுக்கொண்டதின் பேரில் பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக தீபக்கும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1) நானும், தீபக்கும் நண்பர்கள் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் வரும் போது இரவு 8.00 மணி இருக்கும். நான் சம்பவ இடத்துக்கு வரும்போது கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். நான் அங்கு சென்று விசாரித்ததால் இந்த வழக்கில் என்னை சாட்சியாக போட வேண்டும் என்று என்னுடைய முகவரியையும் போலீசார் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் காவல் நிலையம் வரச் சொல்லி கையெழுத்து போட சொன்னார்கள் என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் கையெழுத்து செய்தேன். சம்பவ இடத்தில் விசாரித்த பிறகு மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.ஆ.2 மட்டும் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

**(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).**